
# அண்ணாமலை என்னும் அற்புத மனிதர்



கே.பி. நீலமணி

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அண்ணாமலை என்னும் அற்புத மனிதர்

தமிழ் மொழிக்காக; இசைக்காக
கல்விக்காக உழைத்தவரின்
வாழ்க்கை வரலாறு

By : அமரர் கே.பி. நீலமணி

லியோ பதிப்பகம்
37, மந்தைவெளி தெரு, மந்தைவெளி
சென்னை – 28

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **அண்ணாமலை என்னும் அற்புத மனிதர்** |
| ஆசிரியர் | : | **அமரர் திரு. கே.பி. நீலமணி** |
| முதற்பதிப்பு | : | டிசம்பர் 2004 |
| உரிமை | : | காயத்ரி பாஸ்கர் |
| தாளின் தன்மை | : | 10.5kg வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 1x8 Crown |
| மொழி | : | தமிழ் |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 76 |
| நூல் கட்டுமானம் | : | சாதா கட்டுமானம் |
| நூல் வெளியிடுவோர் | : | லியோ பதிப்பகம்<br>37, மந்தவெளி தெரு<br>மந்தவெளி, சென்னை – 600 028. |
| ஒளி அச்சு | : | **ஜி பப்ளிஷிங் சர்வீஸ்**<br>☎ 2848 1195. |
| விலை | : | **ரூ. 25/-** |
| அச்சிட்டோர் | : | **K.V.S. OFFSET PRINTERS**<br>#6, Old No. 12, Mohamed Hussain Lane,<br>Royapettah, Chennai - 14.<br>☎ 2848 0166. |

# அணிந்துரை

செட்டி நாட்டு அரசர் சர் ராஜா அண்ணாமலை செட்டியார் வாழ்க்கை வரலாற்றை இளைஞர்களும் குழந்தைகளும் எளிதாய்ப் புரிந்து கொள்ளும் வண்ணம் அழகான தமிழில் எழுதியுள்ளார் அமரர் திரு.கே. பி நீலமணி.

ஆண் மூலம் அரசாளும் என்பார்கள். மூல நட்சத்திரத்தில் (30–9–1881) பிறந்த அண்ணாமலை செட்டியார் தமிழ் இசைக்காக தமிழ் மொழிக்காக உழைத்த உத்தமர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினை நிறுவி பலருக்குக் கல்வியை வழங்கிய அண்ணாமலை செட்டியார் சிறந்த கொடை உள்ளம் படைத்தவர்.

ஈட்டலும், காத்தலும், வகுத்தலும் என்னும் மூன்று எழுத்தை தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்த அண்ணாமலை செட்டியாருக்கு தமிழ் இசை மீது இருந்த ஈடுபாட்டை இந்நூலில், இசை விமர்சகரும், தினமணியின் ஆசிரியர் குழுவில் இருந்தவரும், சிறந்த சிறுகதை எழுத்தாளரும், குழந்தை இலக்கியவாதியுமான கே.பி. நீலமணி தெளிவுபட எழுதியிருப்பது பாராட்டத்தக்கது!

அண்ணாமலை செட்டியார் எங்குச் சென்றாலும் திருக்குறள் நூலைத் தன்னுடனே எடுத்துச் செல்வாராம். திருக்குறளை மேற்கோள் காட்டியும் பேசுவாராம். ராஜா அண்ணாமலை செட்டியாரின் புகழ்பாடும் அற்புதமான நூல் இது!

கீழாம்பூர்
ஆசிரியர் – கலைமகள்
15–12–2004

# வாழ்த்துரை

அமரர் கே. பி. நீலமணி பல்வேறு பரிமாணங்கள் கொண்ட ஒரு ஆளுமையாக திகழ்ந்தவர். நாவல், சிறுகதை, சிறுவர் இலக்கியம், பத்திரிக்கைத் துறை, இசை – விமர்சனம் என்று ஈடுபாட்டுடன் செயல்பட்டவர். ஒரு தேர்ந்த இசைக்கலைஞரான அவர் சங்கீதத்தை மையமாக வைத்து எழுதிய "புல்லின் இதழ்கள்" என்னும் நாவல் ஒரு முக்கியமான படைப்பு. எனினும் திரு. நீலமணி அவர்கள் சிறுவர்களுக்காக எழுதுவதில் தான் நீடித்த ஆர்வம் கொண்டிருந்தார் என்று தோன்றுகிறது. "புல்லின் இதழ்களு"க்குப் பிறகு சிறுவர்களுக்காக அவர் எழுதிய படைப்புகள் தான் இலக்கிய உலகில் அவருக்குப் புகழ் தேடி தந்தன.

பெரியவர்களுக்கு எழுதுவதை விட சிறுவர்களுக்கு எழுதுவதுதான் எந்த ஒரு எழுத்தாளனுக்கும், மிகப் பெரிய சவால். தமிழில் நிறைவு தரும் சிறுவர் இலக்கியம் படைத்தவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். சிறுவர்களுக்கு எழுதும் போது. உள்ளடக்கம் குறித்த துல்லியமான பிழைகளற்ற அறிவும், மொழி நடையில் எளிமையும், சொல்லப்படும் விபரங்களுக்கிடையே ஒரு இசைவும் பேணப்பட வேண்டியது மிகவும் அவசியம். சொற்தொகுதி, இடைச்சொற்கள், பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு ஆகியவற்றின் பயன்பாட்டில் உரிய கவனம்

என்று உரை நடையின் நுட்பங்களை அறிந்தவர்களும், பொதுவாகவே பணிவு மிக்கவர்களும்தான் நல்ல சிறுவர்– எழுத்தை உருவாக்க முடியும். பத்திரிக்கைத் துறையில் நீண்ட அனுபவம் பெற்றிருந்த நீலமணி, ஒரு சிறுவர் இலக்கியவாதிக்குரிய இந்த இலக்கணங்களை இயல்பாகவே கொண்டிருந்தார்.

தமிழ் நாட்டில் கல்வி மேம்பாட்டுக்கும், தமிழிசைக்கும் பெருந்தொண்டாற்றிய சர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மிக தெளிவான, அழகான நடையில் திரு. நீலமணி அவர்கள் எழுதியுள்ளார். இந்த புத்தகம் சிறுவர்கள் அனைவருக்கும் நிச்சயமாக ஒரு உந்துதலை அளிக்கும் என்ற வகையில் எல்லோருடைய வரவேற்பையும் பெறும் என்று நம்புகிறேன். திரு. நீலமணி அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் இந்த புத்தகத்தை அமரர் கே. பி. நீலமணியின் மூத்த மகள்திருமதி. காயத்ரி பாஸ்கர் அவர்கள் வெளியிடுவது பாராட்டுக்குரியது.

அவருக்கு என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

திலிப் குமார்
21–1–2005

# அங்கே இங்கே

டாக்டர் திருப்பூர் கிருஷ்ணன்
இரண்டு மணிகளின் மறைவு

## 1. ஒளிவீசும் நீலமணி

பிரபல எழுத்தாளர் கே.பி. நீலமணி அண்மையில் காலமானார். 'புல்லின் இதழ்கள்' நாவல் எழுதியவரின் உயிர், இதய நோய் காரணமாக ஒரு பூப்போல உதிர்ந்துவிட்டது. அன்பே வடிவான தம் மனைவி ஜானகி, இரு புதல்விகள் மற்றும் உறவினர்களை நிரந்தரமாக விட்டுப் பிரிந்துவிட்டார் அவர்.

'அன்பே வடிவான மனைவி' என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது. தம் கணவர் மேல் அந்த மனைவிக்குத்தான் எவ்வளவு பாசம்! கடந்த சில ஆண்டுகளாக, கணவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் அவருக்குத் துணையாக உடன் சென்று கொண்டிருந்தார் அவர். இலக்கியக் கூட்டங்களுக்கும் சங்கீதக் கச்சேரிகளுக்கும் வள்ளுவரும் வாசுகியும் போல அவர்கள் இணைந்து வந்த காட்சி, பார்ப்பவர்கள் கண்ணுக்கு சுகம். பண்பட்ட எழுத்துலகத் தம்பதியர் வரிசையில் கே.பி. நீலமணி தம்பதியர் மறக்க முடியாதவர்கள். கே.பி. நீலமணி 36 ஆண்டுகளுக்கு மேல் தினமணி நாளிதழில் துணையாசிரியராகப் பணிபுரிந்தார்.

பின்னர் பாவை சந்திரனை ஆசிரியராகக் கொண்ட 'புதிய பார்வை' இதழில் பணியாற்றினார். சமீப காலமாக அம்பலம் இன்டர்நெட் இதழை அவரது சங்கீதக் கட்டுரைகள் தொடர்ந்து அலங்கரித்து வந்தன.

75 வயது நிறைந்த நீலமணி எந்தக்குறிப்பிட்ட குழுவையும் சாராத பொது எழுத்தாளர். குழு சார்ந்து இயங்குபவர்களுக்கு, அந்தந்தக் குழுவினரால் உயர்த்திப் பிடிக்கப்பட்டுப் புகழ்பெறும் சௌகரியம் உண்டு. குழு சாராதவர்கள், மாபெரும் சாதனை செய்தாலன்றி, ஓரளவு கூடப் பெயர் வாங்க இயலாது என்ற நிலைதான் தமிழில் நிலவுகிறது.

நீலமணி நிறைய எழுதினார் என்பதோடு நிறைவாகவும் எழுதினார். கலைமகள் நாராயணசாமி ஐயர் பரிசு பெற்ற அவருடைய 'புல்லின் இதழ்கள்' என்ற நாவல், ஒரு சங்கீத நாவல். தமிழில் சங்கீத நாவல் என்றே ஒரு வகை உண்டு. தி. ஜானகிராமனின் மோகமுள், ந. சிதம்பர சுப்ரமணியனின் இதய நாதம், ரஸவாதியின் ஆதார சுருதி, சுஜாதா விஜயராகவனின் அரங்கம் இதெல்லாம் கர்நாடக சங்கீதப் பெருமையைப் பேசுபவை. ஜெயகாந்தனின் 'பாரீசுக்குப் போ' மேற்கத்திய இசைச் சிறப்பைச் சொல்வது. தம் ஒரு சங்கீத நாவலால் தற்காலத் தமிழிலக்கியத்தில் நிரந்தர இடம் பெற்றிருக்கிறார் நீலமணி.

அவர் மிகச் சிறப்பான சங்கீத நாவலைப் படைக்க முடிந்ததற்கு முக்கியக் காரணம் அவரே ஒரு சங்கீத வித்வான் என்பது. சிறந்த வயலின் கலைஞர் அவர். கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையின் சீடர். நீலமணி வயலின் கச்சேரிகள் சிலவும் நிகழ்த்தியிருக்கிறார்.

அகில இந்திய வானொலியோடு அவருக்கு நிறைய நட்புறவு உண்டு. அவரது பல படைப்புகள் வானொலியில் ஒலிபரப்பாகியிருக்கின்றன. 'பாப்பாவுக்கு ஒரு கதை' என நிறையக் கதைகளை வானொலி மூலம் சொன்னார். நீலமணி எழுதிய 'கவிமணியின் கதை' நூல், தமிழக அரசின் பரிசு பெற்றது. இதே நூல் 13 வாரங்கள் சென்னை வானொலியில் ஒலிபரப்பாயிற்று.

25 புத்தகங்களுக்கு மேல் தமிழில் எழுதியவர். சுருதி சுத்தமாக எழுதப்பட்ட எண்ணற்ற சங்கீத விமர்சனங்களின் ஆசிரியர். சங்கீத விமர்சனங்கள் எழுதும்போது, வார்த்தை ஜாலத்தால் படிப்பவர்களை பிரமிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்படமாட்டார். இசைக் கலைஞரின் திறமைக்கு நியாயம் செய்ய வேண்டும் என்றே கருதுவார். நடுநிலையோடு இசை விமர்சனம் எழுத வேண்டும் என்பதற்காக அவர் மேற் கொண்ட உழைப்பு வியக்க வைப்பது.

சிறந்த குழந்தை எழுத்தாளர். 'அன்புப் பணிக்கு ஒரு அன்னை தெரசா', 'தென்னை மரத் தீவினிலே' ஆகிய நூல்களுக்கு ஏ.வி.எம்மின் தங்கப் பதக்க வெள்ளிப் பதக்க விருதுகள் பெற்றவர். இரண்டு தடவை இலக்கியச் சாதனைப் பரிசு பெற்றவர். நீலமணியின் 'மாஸ்டர் ராஜா' என்ற சிறுவர் நாவல் தொலைக்காட்சித் தொடராக 13 வாரங்கள் ஒளிபரப்பானபோது, அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சின்னச் சின்னப் பெருமைகளைக் கூடப் பெரிதாய்க் கருதி நிறைவடையும் பெருந்தன்மை நிறைந்த முதிர்ந்த மனம் அவருடையது.

தி. ஜானகிராமன், எம்.வி. வெட்கட்ராம் போன்ற எழுத்தாளர்களுக்கு நெருங்கிய நண்பராயிந்தவர் கே.பி. நீலமணி. நீலமணி நெடுங்காலம் வாசகர்கள் மனத்தில் ஒளிவீசிக் கொண்டே இருப்பார். தற்பெருமை, அகம்பாவம் போன்றவற்றை முற்றிலும் துறந்துவிட்ட அவரது எளிமையும், அடக்க உணர்வும் இன்றைய இளம் எழுத்தாளர்களால் பின்பற்றப்படுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன.

# நன்றியுரை

இந்நூலை எழுதியுள்ள அமரர் திரு. கே.பி. நீலமணி அவர்கள் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதி குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தங்கப் பதக்கத்தையும், இலங்கைவாழ் தமிழர்களின் கண்ணீர்க் கதையும் அந்த பயங்கரச் சூழலில் பரிதவிக்கும் குழந்தைகளை மையமாகக் கொண்டு இவர் எழுதிய 'தென்னை மரத் தீவினிலே' என்ற நூலுக்கு குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் வெள்ளிப் பதக்கத்தையும் "கவிமணியின் கதை"க்காக இலக்கியச் சிந்தனைப் பரிசையும் பெற்றவர்.

தமிழ் நாட்டின் கல்வி மேம்பாட்டிற்கும், தமிழிசைக்கும் பெருந்தொண்டாற்றிய சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை மிக தெளிவாக, அழகான நடையில், காலஞ்சென்ற எனது தந்தையார் திரு. கே.பி. நீலமணி அவர்கள் எழுதிய இந்நூலை எனது "லியோ பதிப்பகத்தின் மூலம் முதல் நூலாக வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்நூலுக்கு சிறப்பானதொரு 'அணிந்துரை' எழுதி வழங்கிய கலைமகள்ஆசிரியர் திரு. கீழாம்பூர் அவர்களுக்கும், வாழ்த்துரை எழுதி ஆசி வழங்கிய சிறந்த எழுத்தாளர் திரு. திலீப்குமார் அவர்களுக்கும், எனது தந்தையாருக்கு நினைவு அஞ்சலி எழுதிய, பத்திரிகையாளர், எழுத்தாளருமான டாக்டர் திருப்பூர் கிருஷ்ணன் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்

கொள்கிறேன்.

இந்நூலை வெளியிடுவதற்கு அனுமதியுடன் ஆசிகள் வழங்கிய எனது தாயார் திருமதி. ஜானகி நீலமணிக்கும், சிறந்த முறையில் அச்சிட்டுத் தயாரித்துக் கொடுத்த திரு. வெங்கடாசலத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. காயத்ரி பாஸ்கர்

காணிக்கை

சுனாமிப் பேரலையால் உயிரிழந்த லட்சக்கணக்கான—
—வர்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

திருமதி. காயத்ரி பாஸ்கர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நுழைவாயில் | 13 |
| 2. | பூம்புகார் | 16 |
| 3. | அண்ணாமலை | 20 |
| 4. | ஒரு புதிய ஆரம்பம் | 27 |
| 5. | கடமை முடிந்தது | 30 |
| 6. | தந்தையின் பிரிவு | 32 |
| 7. | நல்லதொரு குடும்பம் | 34 |
| 8. | நம்பிக்கையும் நற்பயனும் | 40 |
| 9. | வேருக்கு நீர் | 44 |
| 10. | இசையும் கல்வியும் | 48 |
| 11. | எனது பணியும் என் ஆசைகளும் | 51 |
| 12. | மீனாட்சி கல்லூரி | 52 |
| 13. | துயரம் ஒடைத்தவர் | 57 |
| 14. | அறுபது ஆண்டுகள்! | 61 |
| 15. | ராஜா. சர். அண்ணாமலை செட்டியார் | 65 |
| 16. | கவர்னர்கள் கண்ட கானாடுகாத்தான் | 68 |
| 17. | நிறை வாழ்வு | 70 |
| 18. | அண்ணாமலை என்னும் அற்புத மனிதர் | 72 |

# 1. நுழைவாயில்

கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை இறைவன் நமக்குக் கருணையோடு அளித்துள்ளான்.

அதிலும் –

கூன், குருடு, செவிடு, பேடு போன்ற குறைகளின்றி முழுமனிதனாகப் படைத்திருக்கிறான்.

புல், பூண்டுகளாகவோ –

மரம் செடி, கொடிகளாகவோ,

விலங்கினங்களாகவோ

பறப்பனை, ஊர்வன போன்றோ படைக்காமல், அரிதிலும் அரிதான மனிதப் பிறவியைத் தந்த இறைவனுக்கு நன்றியுள்ள மனிதன் செலுத்தும் காணிக்கை தான் என்ன?

தானும் இனிதே வாழ்ந்து –

தன்னால் இயன்ற உதவிகளைப் பிறருக்கும் செய்து

வாழ்வதே நாம் இறைவனுக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்! இத்தகைய நன்றியுணர்வோடு—

தனக்கென்று மட்டும் வாழாமல்; பிறர் நலனுக்காகவும்; நாட்டிற்காகவும்; உலகிற்காகவும் வாழ்ந்தவர்களையே, மகாத்மாக்களாகவும்; சாதனையாளர்களாகவும், தியாகிகளாகவும் உலகம் போற்றுகிறது.

இத்தகைய சான்றோர்களது வரலாறுகளை ஆழ்ந்து படிக்கும் போது –

அவர்கள் செய்கிற லட்சிய வாழ்க்கை; தியாக மனப்பான்மை ஆகியவை பாடமாக மனத்தில் பதிகின்றது.

இளம் வயதில் விதைகளாக நெஞ்சத்தில் விழும் இத்தகைய உயரிய சிந்தனைகள்–பின்னாளில் அவற்றில் நாட்டங் கொள்ளச் செய்து – சாதனைப் பூக்களாக மணம் பரப்ப வழிவகுக்கின்றன!

இளம் வயதில் காந்தி பார்த்த ஹரிச்சந்திரா நாடகம் – வாழ்க்கையில் இறுதிவரை சத்தியத்தை கடைப்பிடிக்கச் செய்து அவரை மகாத்மாவாக்கியது.

வழிவழியாக வந்த ஈகைக் குணமும் – இளம் வயது முதல், நெஞ்சிலே ஊற்றாகப் பெருகிக் கொண்டிருந்த தமிழ்ப் பற்றும், கல்விச் சிந்தனையுமே—

தமிழிசைச் சங்கம் தந்த தகையாளர் என்றும்—

பல்கலைக் கழகம் படைத்திட்ட ஒப்பற்ற மா மனிதர் என்றும்—

செட்டிநாட்டரசர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரின் புகழையும்; கொடையுள்ளத்தையும் வானளாவ உயர்த்தி ஒளிவீசச் செய்துள்ளது.

வெள்ளையர் ஆண்ட இந்தியாவில் ஆங்கில மோகம் தலைதூக்கி நின்ற காலத்தில்–

அண்ணாமலைச் செட்டியார் என்னும் அற்புத மனிதர் உள்ளத்தில் தமிழ்த்தாய் குடிகொண்டு – 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழைக்' காணவேண்டுமென்று முழங்கிக் கொண்டிருந்தார்.

தாயின் விருப்பத்தை நிறைவேற்றும் தமிழ் மகனாக – அண்ணாமலைச் செட்டியார் அதற்கான அற்புதப் பணிகளைச் செய்து முடித்தார்.

– தெருவெல்லாம் தமிழ் இசை முழங்க – அதற்கென்று ஒரு தனித் தமிழ் இசை மன்றமும்,

– எட்டாக் கனியாக இருந்த கல்விக்கனி – எவர்க்கும் எளிதில் கிட்டும் வண்ணம் – கல்விச் சாலைகளையும்; பார்ப்புகழும் பல்கலைக் கழகமும் படைத்து; தன் உள்ளத்துத் தமிழ்த் தாகத்தைத் தணித்துக் கொண்டவர் ராஜ சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்.

உலகில் சிலரிடம் ஒன்றிருந்தால் ஒன்றிருப்பதில்லை. வற்றாத செல்வமும்; குன்றாத கொடை உள்ளமும் படைத்தவர்கள் உலகில் மிகச் சிலரே!

அவர்களில் முதன்மையாய்த் திகழ்ந்து முத்திரை பதித்துச் சென்றவர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் என்றால், அது மிகையாகாது.

# 2. பூம்புகார்

*"திரைகடல் ஓடியும்*
*திரவியம் தேடு."*

– என்பது ஔவையாரின் அமுதமொழி.

அதற்கொப்ப தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டு –

சீரும் சிறப்புமாய்த் தொழில்புரிந்து பொருள் குவித்தவர்கள் செட்டி நாட்டைச் சேர்ந்த தனவணிகப் பெருமக்களாவர்.

இவர்கள், தளராத ஊக்கமும்; விடா முயற்சியும், தன்னம்பிக்கையும், தெய்வபக்தியும் உடையவர்கள்.

நாட்டுக்கோட்டை செட்டியார் –

தனவணிகர் –

நகரத்தார்... என்றெல்லாம் அழைக்கப்படும் இவர்களுக்கு ஒரு நீண்ட சரித்திர பரம்பரை உண்டு.

சுமார் 1800–ஆண்டுகளுக்கு முன்னர் காவிரிப் பூம்பட்டிணம் என்னும் அழகிய நகரில் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

இந்நகரம் மாயூரத்திற்கு அருகில், காவிரி ஆறு கடலுடன் கலக்கும் இடத்தில் அற்புதமாய் அமைந்திருந்தது.

சோழ வேந்தர்களின் ஆட்சிக் காலத்தில், தலை நகரமாக காவிரிப் பூம்பட்டிணம் சீரும் சிறப்புடனும் விளங்கி வந்தது.

சோழ மன்னர்களின் ஆதரவில், கலைகளும், இலக்கியமும் இங்கு வளர்ந்தன.

இந்நகரத்தின் வளங்களையும், சிறப்புக்களையும் பற்றி–

சேரர் குலச் செம்மலாகிய இளங்கோ அடிகள் இயற்றியுள்ள சிலப்பதிகாரத்திலும், பிற தமிழ் நூல்கள் பலவற்றிலிருந்தும் விரிவாய் அறியலாம்.

இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம் என்னும் நூல்: இந்த காவிரிப் பூம்பட்டிணத்தில் சிறப்புடன் வாழ்ந்த கோவலன் – அவனுடைய மனைவி கற்புக் கரசியாம் கண்ணகி– இவர்களுடைய வரலாற்றினை விரிவாய் எடுத்துரைக்கின்றது.

இவ்விருவரும் தனவணிகர் மரபில் தோன்றியவர்கள் என்பதற்கு சிலப்பதிகாரத்தில் ஏராளமான சான்றுகள் காணப்படுகின்றன.

காலப்போக்கில் நகரத்தார் திருமணங்களில் இன்று சிறு சிறு மாறுதல்கள் ஏற்பட்டிருப்பினும் –

சிலப்பதிகாரத்தில் காணப்படும் திருமண முறைகள்; திருமணம் ஆனவுடன் தனிக் குடித்தனம் நடத்த ஏற்பாடு செய்து கொடுத்தல் ஆகிய அந்நாளைய நடைமுறை மரபுகளை நகரத்தார், இன்றும் அப்படியே பின்பற்றி வருகிறார்கள்.

காவிரிப் பூம்பட்டினம் என்னும் புகார் நகரத்திலிருந்து பிற்காலத்தில் பாண்டி நாட்டில் குடியேறியமையால், 'நகரத்தார்' என்று இவர்கள் பெயர் வழங்கப் பெற்றனர்.

அறுபத்தி மூன்று நாயன்மார்களுள் –
'காரைக்கால் அம்மையாரும்'–

'இயற்பகை நாயனாரும்'—

அருட்பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ள 'பட்டினத்து அடிகளும்' இம்மரபினைச் சேர்ந்தவர்களே.

சுருங்கச் சொன்னால், சங்ககாலம் எனப்படும் மூவேந்தர் காலம் முதல், நகரத்தார் மரபு சிறப்புற்று விளங்கியது என்று கூறலாம்.

இந்த வணிக மரபினர் சிறப்பாகத் தொழில் புரிந்து – ஏராளமாகப் பொருள் சேர்க்கும் திறன் படைத்தவர்கள். நேர்மையும், நியாயமும், இறைபக்தியும் உடையவர்கள். உள்ளூரிலும், கடல் கடந்தும் பொருள் ஈட்டும் நிமித்திம் தொழில் புரியச் செல்பவர்கள். இவர்கள் –

ஈழம், கடாரம், தூரகிழக்கு நாடுகளுக்கெல்லாம் சென்று வாணிகத் துறையில் ஈடுபட்டு வந்தனர்.

இப்படிப் பொருளீட்ட அன்னியநாடு செல்லும் தனவணிகர்கள் சுயநலத்தோடு வாழாமல்—

தாங்கள் தொழில் புரியும் நாடுகளும் செழிப்புற்று இருக்க வேண்டும் என்கிற மேலான எண்ண முற்றிருந்தனர். அந்த நாடுகளின் வளர்ச்சிக்கும் பேருதவி புரிந்து பிறர் பாராட்டும் வண்ணம் வாழ்ந்து வந்தனர்.

இவர்களுடைய வரவால் – வாணிகத் திறத்தால் அந்த நாடுகள் வளம் பெற்றன என்று சொல்வது மிகையாகாது.

நகரத்தார் எப்பொழுதும் தம்முடைய செல்வத்தினை மிக நல்ல பயன் தரக்கூடிய வகையிலேயே முதலீடு செய்வார்கள்.

அதனால் –

இவர்கள் வாழுமிடமெல்லாம், செல்வத் துறையில் மிக இன்றியமையாதவர்களாகவே, வாழ்ந்து வருகிறார்கள்.



# 3. அண்ணாமலை

தென்னிந்தியக் கிழக்குக்கரைப் பகுதியிலுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தையும்; புதுக்கோட்டையை அடுத்துள்ள நிலப் பரப்பையும் ஒருங்கே கொண்டது; செட்டி நாட்டுப் பகுதியாகும்.

தளராத உழைப்பும்; தணியாத இறை உணர்வும்; விடா முயற்சியும் கொண்ட, 'நகரத்தார்' என்னும், தன வணிகப் பெருமக்களின் தாயகமாகத் திகழ்ந்தது இப்பகுதி.

இங்குள்ள கானாடு காத்தானில், வளமான வாணிகத்திற்கும்; வற்றாத வள்ளன்மைக்கும் பெயர் பெற்றகுலத்தினரான, வெ.சா.ராம.மு. முத்தையா செட்டியாருக்கும், குணவதியான அவரது மனைவி மீனாட்சி ஆச்சியாருக்கும் நான்காவது திருமகனாக –

1881–ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 30–ம் நாள் வெள்ளிக்கிழமையன்று, மூல நட்சத்திரத்தில் அண்ணா மலைச் செட்டியார் பிறந்தார்.

இவரது பெற்றோரான முத்தையா செட்டியார் – மீனாட்சி தம்பதியினருக்கு முறையே, 'சிதம்பரம்; இராமசாமி; அருணாசலம்; அண்ணாமலை', என்னும் நான்கு மகன்களும், மூன்று புதல்விகளும் பிறந்தனர்.

முத்தையா செட்டியார், வாணிகத் தொழிலோடு, பொதுநலத் தொண்டுகளிலும் ஈடுபட்டு வந்தார். அவற்றுள், சிதம்பரத்தில் அமைந்துள்ள தர்ம சத்திரமும் ஒன்றாகும்.

உண்மையில் உறுதி; உதவுவதில் முன்னிற்றல்; வாணிகத்தில் பற்று – இம்மூன்றுமே அவரது குடும்பத்தினரின் தனிப் பெரும் பண்புகளாக விளங்கின.

அண்ணாமலை பிறந்ததும் அக்குடும்பத்தினர் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் திளைத்தனர். குடும்ப ஜோஸ்யர் கூறினார்:

'ஆண் மூலத்தில் பிறந்த பிள்ளை அரசாளப் போகிறான்' – என்று அவரது வாக்குப் பலித்தது.

பின்னாளில் அண்ணாமலைச் செட்டியார் அத்தகைய வாழ்க்கைத் தகுதிக்கொப்ப; அறத்தாலும், திறத்தினாலும் தன்னை உயர்த்திக் கொண்டு, செட்டி நாட்டு அரசரானார்.

கடைக்குட்டி என்று அனைவராலும் செல்லமாக வளர்க்கப்பட்ட, தன் மகன் அண்ணாமலையை பள்ளியில் சேர்க்க முத்தையா செட்டியார் நாள் பார்த்தார்.

அண்ணாமலையின் ஐந்தாவது வயதில் குறித்த நாளன்று வீட்டில் விசேஷ பூஜைகள் செய்து, குடும்பத்தினர் புடை சூழ, பாண்டும், மேள வாத்தியங்களும் முழங்க பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை அணிந்து கொண்டு முதலில் விநாயகர், கோவிலுக்கும், பின்னர் சரஸ்வதி கோவிலுக்கும் சென்று வணங்கிவிட்டு, அண்ணாமலை பள்ளிக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

அக்காலத்தில் வசதி படைத்தவர்களின் குழந்தைகளே பள்ளிக்குச் செல்லும் பழக்கம் இருந்தமையால் – ஆரம்பப் பள்ளி என்பது, ஒரு வீட்டில், சில தடுப்புகளுடனேயே இயங்கி வந்தது.

ஆசிரியரும் பகுதி நேர ஊழியராகவே, பிற்பகல் வேளையில் வந்து போவார்.

இரண்டு ஆண்டுகள் தமிழில் ஆரம்பப் பாடங்களை அண்ணாமலை அங்கு நன்கு கற்றுத் தேர்ந்தார்.

முதலில் கானாடுகாத்தானிலும், பிறகு கரூரிலும் கல்வி பயின்ற அண்ணாமலைக்கு இயற்கையிலேயே தமிழின் மீதும், ஆங்கிலக் கல்வியின் மீதும் மிக்க ஆர்வமிருந்தது.

பிற்காலத்தில் ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றி நன்கு அறிந்திருந்த தந்தை, தன் மகனின் ஏழாவது வயதிலிருந்து தனியாக வீட்டிலிருந்தபடி ஆங்கிலக் கல்வி பயில ஏற்பாடு செய்தார்.

முதலில் உள்ளூரிலிருந்த ஒரு போஸ்ட் மாஸ்டரிடமும்; பின்னர் தந்தி அலுவலகத்தில் பணி புரிந்து வந்த ஆங்கிலப் புலமை மிக்க டி.பி. பொன்னுசாமி பிள்ளை என்பவரிடமும் அண்ணாமலை ஆங்கிலக் கல்வி பயின்றான்.

இளம் வயதிலிருந்தே அண்ணாமலைச் செட்டியார் எதையும் எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

முறையான பள்ளிகளும், கல்வித் திட்டங்களும் இல்லாத அந்தக் காலத்தில் விளையாட்டுத் துறையைப் பற்றி யாரும் அக்கரை கொண்டவர்களாக இருந்ததில்லை.

இந்த சமயத்தில் –

தூரத்து உறவினரான எஸ்.ஏ.ஏ. அண்ணாமலை செட்டியார் என்னும் பெயர் கொண்ட வாலிபன் அங்கு வந்து சேர்ந்தான்.

விளையாட்டுத் துறையில் மிகுந்த ஈடுபாடுடைய அவர், அண்ணாமலைச் செட்டியாரை மைதானத்திற்கு அழைத்துச் சென்று, ஹாக்கி, டென்னிஸ், கால்பந்து போன்ற பலதுறை விளையாட்டுக்களில் நல்ல பயிற்சியை ஏற்படுத்தி திறமைசாலி ஆக்கினார்.

இவர்கள் விளையாடுவதைப் பார்த்து, அண்டை அயலில் உள்ள செட்டிமார் வீட்டுப் பிள்ளைகளும் வந்து கலந்து கொள்ளவே–

பகலில் கல்விநேரம் போக மாலையில் விளையாட்டில் ஆர்வம் மிகுந்து பொழுது இன்பமாகக் கழிந்தது. அதுமட்டுமல்லாமல், அந்த வயதில் வலுவான உடல் ஆரோக்கியத்தையும் அண்ணாமலை பெற்றான்.

கல்வி பயிலும் போதே – தந்தைக்கு உதவியாக தொழிலிலும், அறப் பணிகளிலும் அண்ணாமலைச் செட்டியார் ஈடுபட்டு வந்தார்.

கல்வியை ஓரளவோடு நிறுத்திக் கொண்டு, இளம் வயதிலேயே தொழில் புரிந்து பணம் சேர்க்கும் ஆர்வமே அண்ணாமலை செட்டியாரின் மனதில் மேலோங்கி நின்றது. அதற்கேற்ற திறமையை அவர் அப்போதே வளர்த்துக் கொண்டிருந்தார்.

இந்த சமயத்தில் பெற்றோர்கள் – அவருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று விரும்பி, அதற்கான காரியங்களில் ஈடுபட்டு வந்தனர்.

கானாடு காத்தானிலிருந்து, இரண்டு மைல் தொலைவிலுள்ள பள்ளத்தூரில் செல்வந்தராக எம்.ஏ.ஆர்.எம்.பி. பழனியப்ப செட்டியார் விளங்கி வந்தார்.

அவரது புதல்வி சீதாவை அண்ணாமலைக்காகப் பெற்றோர், பெண் பார்த்து வந்தனர். குடும்பத்தினர், அனைவருக்கும் பிடித்துப் போகவே, திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது.

1895–ம் ஆண்டு அண்ணாமலைச் செட்டியாருக்கும்; சீதாவிற்கும் திருமணம் நான்கு நாட்கள் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

அப்போது அண்ணாமலைச் செட்டியாருக்குப் பதினான்கு வயது –

சீதாவிற்கு பதினைந்து வயது.

ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், திரளாகத் திருமணத்திற்கு வந்திருந்து பரிசும், பொருட்களும் வழங்கி, மணமக்களை வாயார வாழ்த்தினர்.

கனவுபோல் திருமண நிகழ்ச்சி நடந்து முடிந்து விட்டது; அண்ணாமலை செட்டியாரின் நினைவெல்லாம் –நன்கு தொழில் புரிந்து தந்தையைப் போல் பேரும் புகழும் பெற்று முன்னுக்கு வர வேண்டியதைப் பற்றியே சிந்தித்த வண்ணமிருந்தது.

நாட்கள் உல்லாசமாக ஓடிக் கொண்டிருந்தன–

திருமணமான பிறகு அண்ணாமலை செட்டியார் தன் மனைவியோடு தனிக் குடித்தனம் நடத்த துவங்கினார்.

இதனால் –

அவர் குடும்பத்தை விட்டுப் பிரிந்து போனார் என்று பொருளல்ல.

கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தாலும் திருமணத் திற்குப் பிறகு – மணமக்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுத்து பெற்றோரே முன்னின்று தனிக் குடித்தனத்திற்கு ஏற்பாடு செய்வது நகரத்தாரின் வழிவழியாக வந்த மரபு.

தொழிலை அக்கரையோடு செய்து; தனக்கென்று தனியாக வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும்–

தன் குடும்பத்தில் ஏற்படுகிற கஷ்ட நஷ்டங்களுக்குத் தாங்களே முழுப் பொறுப்பேற்று – குடும்பத்தைச் செம்மையாகக் கொண்டு செல்லவும் –

இளம் வயதிலிருந்தே – புது மணமக்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளிப் படிப்பை ஓரளவுடன் நிறுத்திக் கொண்டாலும்– பலருடன் பழகிப் பொது அறிவை அண்ணாமலைச் செட்டியார் வளர்த்துக் கொண்டே வந்தார்.


சிறுவயது முதல் வாணிகத் தொழிலில் தந்தையாருக்கு உதவியாக இருந்து வந்ததின் மூலம், தொழிற் கல்வியிலும் அவர் சிறந்து விளங்கினார்.

அத்துடன், அறத்துறையிலும் – தர்ம காரியங்களிலும், தந்தையாரைப் போலவே ஆரம்ப காலத்திலிருந்தே ஆர்வம் மேலோங்கி நின்றது.

ஓய்வு பெறும்போது பொதுத் தொண்டு என்று எண்ணாமல் உழைத்துச் சம்பாதிக்கும் போதே தர்மப் பணிகளுக்காகத் தொண்டாற்றுவதற்குகென்று தன் வருவாயைத் திட்டமிட்டு வகுத்தார்.

"ஈட்டலும்; காத்தலும்; வகுத்தலும்", என்னும் மூன்றெழுத்தைத் தாரக மந்திரம் போல் தன் இறுதி மூச்சி உள்ளவரைப் பின்பற்றி வந்தார்.

கனவுகளை நினைவாக்க வேண்டிய காலம் அவருக்காகக் காத்திருந்தது.



அரசர் முத்தையா அவர்களும் அவருடைய தம்பியர்

திரு. இராமநாதன்செட்டியாரும், திரு. சிதம்பரம் செட்டியாரும்—மேயர்உடையில்

# 4. ஒரு புதிய ஆரம்பம்

பள்ளிப் பருவத்திலிருந்தே தந்தையாருடன் சேர்ந்து, தொழில் நுணுக்கங்களையும், பணம் பெற்று வரவுக் கணக்குகளையும்; கொடுக்கல் வாங்கலில் உள்ள சிக்கலான நடைமுறைகளையும் பற்றித் தெளிவாக அறிந்து வைத்துக் கொண்டிருந்தார் அண்ணாமலைச் செட்டியார்.

கணிதத்தில் அவருக்கு இருந்த அபார திறமை; பிற்காலத்தில் வாணிகத் தொழில் புரியும் போது பெரிதும் கை கொடுத்தது.

உரிய காலத்தில் தமக்குரிய சொத்துக்களைப் பெற்றுக் கொண்ட அண்ணாமலைச் செட்டியார், வாணிகத்திலேயே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தனித் தொழில் செய்யத் துவங்கனார். அதற்குரிய துணிவும்; தன்னம்பிக்கையும் அவரிடம் மேலோங்கி நின்றது.

கடல் கடந்து ஈழம், கடாரம், பர்மா, மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கெல்லாம் சென்று, வாணிகத் துறையில் பேராற்றலையும்; பெருந்திறனையும் வளர்த்துக் கொண்டார்.

**1911**–ம் ஆண்டில் ஒரு முறையும் **1935**–ம் ஆண்டில் ஒருமுறையுமாக, இரண்டு முறை லண்டனுக்குச் சென்று வந்தார்.

ளவையிலும், மூன்று ஐந்தாண்டுகள் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினராக விளங்கினார்.

நிதி நிர்வாகத்தில் சிறந்து விளங்கிய இவரால், நாட்டு பொருளாதாரத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க செயல்கள் ஆற்ற முடிந்தது. எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதைச் சிறப்புடனும்; ஆற்றலுடனும், மிகுந்த ஈடுபாட்டுடனும் செய்து முடிப்பவர் அண்ணாமலைச் செட்டியார்.



ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார், தம் புதல்வர்களுடன்

# 5.கடமை முடிந்தது

எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் முத்தையா செட்டியாரின் உடல் நிலை சமீப காலமாக மோசமாகிக் கொண்டே வந்தது.

ஆயினும் அதை அவர் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. வியாபாரத்தில் ஈடுபட்டு வரும், தன் மகனுக்கு, கவலையை உண்டாக்கக் கூடாது என்பது அவர் எண்ணம்.

அண்ணாமலையைத் தன் விருப்பப்படி நன்றாக உருவாக்கி விட்டமைக்காக மகிழ்ந்தார். அவரது மனம் எப்போதும் தம் அருமை மகனது சிறப்பியல்புகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அண்ணாமலை செட்டியாரின், அறிவும் திறமையும் அவரை பெருமை கொள்ளச் செய்தன.

இளமையில் தான் கற்ற கல்வியை மேலும் மேலும் அரிய பல நூல்களை வாங்கிப் படித்து அவர் அபிவிருத்தி செய்து கொண்டவர்.

நாள்தோறும் இந்து பத்திரிகை படிக்கத் தவறுவதில்லை.

அப்போதெல்லாம், தன் மகனை உரக்கப் படிக்கச் சொல்லி; தன் மகன் ஆங்கிலம் படிக்கும் அழகை ரசித்துப் பூரித்துப் போவார்.

அண்ணாமலை எங்கு சென்றாலும் திருக்குறளை எடுத்துச் செல்ல தவறமாட்டார்.

பிறரிடம் பேசும் போது, சில குறள்களை, தக்க சமயத்தில் பயன்படுத்தி மேற்கோள் காட்டிப் பேசுவார்.

சுயமாக முயற்சி செய்தும்; தானே பல நூல்களைப் வாங்கிப் படித்தும்; ஆங்கிலத்தில் மிகத் தெளிவாகவும், வரையறுத்தும் கூறும் ஆற்றலை வளர்த்துக் கொண்டவர்.

அறிவாற்றலிலும், பரம்பரை வாணிகத் தொழிலிலும் தன் மகன் வேகமாக வளர்ந்து வருவதை கண்ணாரக் கண்டபோது உள்ளபடியே உள்ளம் பூரித்துப் போவார்.



திருச்சிராப்பள்ளி நகரமன்றவரவேற்பு –பெரியார்திரு.ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் அரசர்அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துதல்

# 6. தந்தையின் பிரிவு

வியாபார நிமித்தம் வெளியூர் சென்றிருந்த அண்ணாமலைச் செட்டியார் படுத்தபடி இருக்கும் தன் தந்தையாரின் உடல் நிலையைக் கண்டு பதறிப் போனார்.

தன் தந்தையை அந்த நிலையில் விட்டு விட்டு வெளியூர் சென்றதன் செயலுக்காக வருந்தினார்.

உடனடியாக மருத்துவரை அழைத்துக் கொண்டு வந்தார். முத்தையா செட்டியாரின் உடல்நிலையைப் பரிசோதித்த டாக்டர், அண்ணாமலைச் செட்டியாரை தனியே அழைத்து வியாதி முற்றி, முத்தையா செட்டியார் கவலைக்கிடமான நிலைமையில் இருப்பதை விளக்கி; மருந்தும் மாத்திரைகளும் எழுதிக் கொடுத்தார்.

அவற்றை உடனடியாக வாங்கிவந்து தந்தையாரை உட்கொள்ளும்படிச் செய்தார்.

டாக்டர் எழுதிய மருந்து, மாத்திரைகளை வேளை தவறாமல் கொடுத்து; அருகிலிருந்தே கண்ணை இமை காப்பது போல், வேண்டிய பணிவிடைகள் செய்து வந்தார்.


டாக்டர் தினம் இருவேளை வந்து, மருந்தும் மாத்திரைகளும் மாறி மாறி எழுதிக் கொடுத்து விட்டுப் போனார்.

இறுதியில், ஒருநாள் அவரது உடல் நிலை மிக மோசமாகி; தன் அருமை மகன் அண்ணாமலையின்

கரத்தை அழுந்தப் பற்றியபடியே 1901–ம் ஆண்டு இறந்து போனார்.

தாய், தந்தை, குரு, தெய்வம், தோழன் என்று அனைத்துமாகத் தன்னுடன் இருந்து அன்பும், ஆதரவும் காட்டி, தொழில் நுணுக்கங்களையும், வாழ்க்கை நெறிமுறைகளையும், புகட்டி–

நல்லதொரு வழிகாட்டியாய்த் திகழ்ந்த தன் தந்தையாரின் மரணம் அண்ணாமலைச் செட்டியாரின் மனதை வெகுவாகப் பாதித்து விட்டது.



அருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் திருப்பூட்டுதல்

# 7. நல்லதொரு குடும்பம்

ஒரு மனிதன் வாழுங் காலத்தில் போற்றப்படுவதை விட—

அவன் மறைந்தபின் எத்தனை காலம் வாழ்கிறான் என்பதுதான் பெருமைக்குரிய விஷயம்!

அண்ணாமலைச் செட்டியாரின் தந்தை முத்தையா செட்டியார் செல்வந்தராக விளங்கியும்; செருக்கின்றி வாழ்ந்தவர். ஏழை எளியவர்களிடம் இரக்கம் கொள்ளும் இளகிய மனம் கொண்டவர். வறியவர்களுக்கு வாரி வழங்கும் கொடையுள்ளம் கொண்டவர்.

நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினரால் — அவர்களாகவே ஏற்றுக் கொண்ட தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

இவரது பக்தி உணர்வும்; அறங்கள் செய்வதில் உள்ள ஆர்வமும் அனைவரையும் இவர்பால் ஈர்த்தன. முத்தையாச் செட்டியார் பிறருக்குத் தொண்டாற்று வதையே பக்தியாகக் கருதினார்.

சமயத் தொடர்பானவையும்; அல்லாதவையுமான பல அறக்கட்டளைகளை இவர் நிறு;வினார்.

சிதம்பரத்தில் குடி கொண்டிருக்கும் நாடராஜப் பெருமானது கோயிலைப் புதுப்பித்து — கூரைக்குப் பொன் வேய்ந்து குட முழக்குச் செய்வித்தார்.

திருச்சி மாவட்டத்திலுள்ள கருவூர்ச் சிவன் கோவிலைப் புதுப்பித்தார்.

வழிப்போக்கர்களும்; புண்ணியத் தல யாத்திரீகர்—கஞம் வழியில் உண்ண உணவும்; தங்க இடமுமாகப் பல அன்னதானச் சத்திரங்களை நிறுவினார்.

தேவாரம் பயிற்றுவிக்கும் பள்ளிகளையும், வடமொழி கற்பிக்கும் பாடசாலைகளையும் பல இடங்களில் ஏற்படுத்தினார்.

இதுபோன்ற பல பொதுத் தொண்டுகளையும், அறச் சேவைகளையும் உடனிருந்து கண்டு களித்த காரணத்தினால் அண்ணாமலைச் செட்டியாரின் மனம், அடிக்கடித் தந்தையாரை எண்ணி வாடி வருந்தியது.

தந்தையாரோடு ஒரே வீட்டில் வாழ்ந்த நாட்களை எண்ணிப் பார்க்காமல் அவரால் இருக்க முடியவில்லை.

வீட்டில் புழக்கத்தில் உள்ள ஒவ்வொரு பொருளும் தந்தையின் கரம் பட்டவை. அவற்றைக் காணும் போதும்; தீண்டும் போதுமெல்லாம் கண் கலங்கினார்.

தொழில் நிமித்தம் எங்கு சென்றாலும் யாருடன் பேசினாலும் அவர்கள் தந்தையின் பெயரையும்; அவர் தங்களுக்குச் செய்த உதவிகளையும் பற்றி நினைவு கூறாதவர்கள் இல்லை.

இத்தகைய சம்பவங்களின் காரணமாக மனம் பாதிக்கப் பட்டு பல சமயங்களில் தன் தந்தையாரின் பெரிய திருவுருவப் படத்தைப் பார்த்தவாறே நின்றதுண்டு.

அப்போதெல்லாம்—

'கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பாராமல்— மேலே மேலே முன்னேற்றப்பாதையை நோக்கி, வேகமாக அடி எடுத்துச் செல்' — என்று தனக்குத் தந்தை அறிவுறுத்துவது போலவே தோன்றும்.

காலம் என்னும் அற்புத மருத்துவன் அவர் மனத்துயரை மெல்ல மெல்ல ஆற்றி வந்த போது—

அண்ணாமலைச் செட்டியார் மட்டுமின்றி குடும்பத்தினர் அனைவரையுமே மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைத்த நாள் ஒன்று வந்தது.

ஆம்!

**5.8.1905**—ம் ஆண்டு அண்ணாமலைச் செட்டியாருக்கு அழகே உருவானதொரு ஆண் குழந்தை பிறந்த செய்திதான் அது!

அயோத்தியில் ராமன் பிறந்தது போல்—

அண்ணாமலைச் செட்டியாருக்கு ஆண்மகவு பிறந்த செய்தி கேட்டு ஊரே குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது.

அண்ணாமலைச் செட்டியார் எண்ணற்ற தான தருமங்கள் செய்தார். தன்னிடம் பணிபுரியும் ஊழியர்களுக்கெல்லாம், பரிசும், பணமும் வாரி வழங்கினார்.

நல்லதொரு நாளில், குழந்தைக்கு, "முத்தையாச் செட்டியார்" என்னும் பெயர் சூட்டும் விழாவை ஊரே வியக்கும் வண்ணம் விமரிசையாகக் கொண்டாடினார்.

முத்தையாச் செட்டியார் பிறக்கும் போதே கருவில் திருவுடையராய்ப் பிறந்தார்.

அண்ணாமலைச் செட்டியார் தம் அருமை மகனை மிகவும் கண்ணும் கருத்துமாய் வளர்த்து ஆளாக்கினார்.

தந்தையை போன்றே, உரிய தோற்றப் பொலிவு; அறிவுத் திறன், உயர் பண்பு முதலிய எல்லா நற்குணங் களும் வாய்க்கப் பெற்று முத்தையா செட்டியார் விளங்கினார்.

அண்ணாமலைச் செட்டியாரின் மூத்த அண்ணனும்; முத்தையாச் செட்டியாரின் பெரியப்பாவுமான சிதம்பரம் செட்டியார் செல்வாக்கு மிக்கவர். கானாடு காத்தானில் அஞ்சல் நிலையம் அமையச் செய்தவர்.

தம் இனத்தவர் வாழும் ஊர்களுக்குச் சென்று வர ஒழுங்கான பாதைகளை உருவாக்கினார். இவரது தொண்டு, நகரத்தார் நாட்டளவில் நின்றது என்று கூறலாம்.

சிதம்பரச் செட்டியாரின் தம்பியும், முத்தையாச் செட்டியாரின் இளைய பெரியப்பாவுமான இராமசாமிச் செட்டியார் சிறந்த கல்விமானாக விளங்கினார்.

தில்லை நடராஜரிடம் மிகுந்த பக்தி பூண்டவர். **1908** முதல் **1916**–ம் ஆண்டு வரை, சிதம்பரம் நகரமன்றத் தலைவராகவும் **1910** முதல் **1913** வரை, சென்னை மேல் சபை உறுப்பினராகவும் இருந்தார்.

வணிக மரபினரில் மேல் சபை உறுப்பினராக முதன் முதலில் இருந்தவர் இவரே. இதற்காக இவரைப் பாராட்டி நகரத்தார் விருந்துபசாரம் செய்தனர்.

அக்கால கட்டத்தில் சட்டசபை உறுப்பினர்களின் பெயர்களைக் கூறும் போது – 'கனம் பொருந்திய',

என்னும் என்ற சிறப்பு அடைமொழி சேர்த்துக் கூறுவது வழக்கமாக இருந்தது. மேலும், இராமசாமிச் செட்டியார் சிதம்பரம் தாலுகா போர்டின் தலைவராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார்.

இவர் செய்த, பல பொது நலப்பணிகளைக் கண்டு மகிழ்ந்த சென்னை அரசாங்கம் இவருக்கு, 'திவான் பகதூர்', என்கிற சிறப்புப் பட்டத்தினை வழங்கியது.

இவர் சிதம்பரம் நகரமன்றத் தலைவராக இருந்தபோது, அந்நகரத்திற்கு குடிநீர்த் தேக்கம் நிறுவினார். அதற்கு அப்போதைய கவர்னராக இருந்த சர். ஆர்தர். லாலி என்பவர் அடிக்கல் நாட்டினார்.

அந்த விழாவில், சிறுவனாக இருந்த முத்தையாச் செட்டியாரும் கலந்து கொண்டார்.

விரைவிலேயே –

இராமசாமிச் செட்டியார், சிதம்பரத்தில் ஓர் உயர்நிலைப் பள்ளியையும் நிறுவினார். அது, சிதம்பரத்தில் சிறப்புடைய உயர்நிலைப் பள்ளியாகத் திகழ்ந்தது.

சிதம்பரம் கோயிலை புதுப்பித்து, அதற்கு அருகில் உள்ள, 'திருவேட்களம்', என்னும் திருக்கோயிலையும் கட்டி, அதன் குடமுழுக்கு விழாவை **1915**–ம் ஆண்டு நடத்தினார்.


அவ்விழாவில் அண்ணாமலைச் செட்டியார் தம் அருமைக் குமாரர் ராஜா முத்தையா செட்டியாருடன் கலந்து கொண்டார். அப்போது அவருக்கு **10** வயது.

முந்தைய தலைமுறையில், அண்ணாமலைச் செட்டியாரைப் போலவே, கல்விக்குப் பெரும் பொருள் வழங்கிய வள்ளல் பச்சையப்ப முதலியார்.

இருவரும் முற்போக்கு மனம் உடையவர்களாய் கல்விக்குக் காவலர்களாய் அவர்கள் காலத்தில் திகழ்ந்தார்கள்.

சிதம்பரத்தில், பல அறக்கட்டளைகளுக்கு, இருவரும் பெரும் பொருள் வழங்கியவர்கள்.

அண்ணாமலைச் செட்டியார், காரைக்குடி, நகரசபைத் தலைவராக இருந்து எண்ணற்ற பொதுநலப் பணிகளைச் சிறப்புறச் செய்தார்.



திருச்சி நகரமன்ற வரவேற்பில், ராணி லேடி மெய்யம்மை ஆச்சி அவர்களுக்கு, திரு வாட்டி சொக்கலிங்கம் அவர்கள் பொன்னாடை போர்த்துதல்.

# 8. நம்பிக்கையும் நற்பயனும்

அண்ணாமலைச் செட்டியார், தில்லை நடராஜப் பெருமான் மீது அசைக்க முடியாத நம்பிக்கையும் – ஆழமான பக்தியும் கொண்டவர். அந்த ஆலய நலனில் அக்கறை கொண்டு பல அறப் பணிகளைச் செய்தவர்.

ஒரு சமயம் –

சிதம்பரம் கோயிலில் சிறிது காலமாகப் புனைந்து கொண்டிருந்த சமயச் சண்டை பெரிய உருப்பெற்றது.

தில்லையில் நடராஜருக்கு அர்ச்சனை செய்யும் தீக்ஷிதர்களுக்கும்–

அங்குள்ள கோவிந்த ராஜப் பெருமாளுக்கு அர்ச்சனை செய்யும் பட்டாச்சாரியார்களுக்குமிடையே, பல ஆண்டு காலமாகத் தீவிர பகையும் பூசலும் மேலோங்கி நின்றது.

சிதம்பரத்தில், நடராஜர் உருவச் சிலையும்; கோவிந்த ராஜப் பெருமாள் விக்கிரகமும், அருகருகே இருந்தாலும், திசைகள் திரும்பி –

ஒன்று கிழக்கு முகமாகவும்–
ஒன்று தெற்கு முகம் நோக்கியும்
காட்சியளித்துக் கொண்டிருந்தது.

இரு விக்கிரகங்களையும், ஒருமுகப்படுத்தி – ஒரே திசையை நோக்கி வைத்தால் பக்தர் ஒருசேர தரிசனம்

செய்ய முடியும் என்கிற கருத்துக்கு பல்லாண்டு காலமாக இருவருமே இசைந்து வரவில்லை.

இப்போதும் –

இது பற்றிய ஒரு மத்தியஸ்தத்துக்குத் தான் அண்ணாமலைச் செட்டியாரை சிலர் அழைத்து வந்தார்கள்.

தமது தந்தையார் காலத்திலிருந்தே அவர் தலையிட்டும் தீராத இந்த வழக்கை நாம் எப்படித் தீர்க்கப் போகிறோம், என்று எண்ணிக் கொண்டே சென்றார்.

அவர் எண்ணியது போலவே – நீண்ட நேரம் எடுத்துச் சொல்லியும் அவர்கள் இருவரும் எவ்வித மத்யஸ்தத் திற்கும் கட்டுப்படவில்லை. அண்ணாமலைச் செட்டியார் மனமுடைந்து போனார்.

இந்த சமயத்தில் –

அண்ணாமலைச் செட்டியாருக்குப் பேரன் பிறந்திருப்பதாகத் தந்தி வந்தது.

உடனே அவர் – வழக்கை அப்படியே விட்டுவிட்டு எல்லோரிடமும் விடைபெற்றுச் சென்றுவிட்டார். ஆனால்–

அண்ணாமலைச் செட்டியார் மனம் வருந்திச் சென்றதில் இருசாராருக்கும் ஏற்பட்ட துயரமும், அவருக்குப் பேரன் பிறந்த மகிழ்ச்சியில் பங்கு பெறவேண்டுமென்று ஏற்பட்ட ஆவலும், அவ்விரு அர்ச்சகர்களின் உள்ளத்திலும் ஒரு புதிய மாறுதலை கண நேரத்தில் ஏற்படுத்தியது.

சற்றைக்கெல்லாம் –

நடராஜர் கோவிலின் ஆலயமணி கம்பீரமாக முழங்கிக் கொண்டிருந்தது.

அண்ணாமலைச் செட்டியாரின் பேரனுக்கான அர்ச்சனையை, தீக்ஷிதரும், பட்டாச்சாரியாரும் ஒரு சேர நிகழ்த்தினர்.

இருவரும் குழந்தைக்காக அர்ச்சனை செய்த பிரசாதம், பூ, பழம், கற்கண்டு முதலியவற்றை இரு தாம்பாளங்களில் ஏந்திக் கொண்டு, அண்ணாமலைச் செட்டியார் வீடு சென்று வாழ்த்தினார்கள். அவர் கூறியதை, இருவரும் ஏற்பதாகக் கூறினார்கள்.

குழந்தை மூலம் ஒரு வழக்கினைத் தீர்த்து வைத்த, தெய்வத்தின் திருவருளை எண்ணி அண்ணாமலைச் செட்டியார் நெகிழ்ந்து போனார்.

அதன்பிறகு காரியங்கள் வேகமாகச் செயல்பட்டன.

நடராஜரும், கோவிந்த ராஜப் பெருமாளும் முகம் திருப்பி நிற்காமல் –

ஒருசேர பக்தர்களுக்குக் காட்சிதரும் வகையில் விக்கிரகங்களைத் திருப்பி அமைப்பதற்கான உயர்ந்த பீடங்களை அண்ணாமலைச் செட்டியார் தம் செலவில் உருவாக்கிக் கொடுத்து,

காலம் காலமாகத் தீராதிருந்த ஒரு வழக்கிற்கான முடிவும் கண்டார்.

இந்தக் காரியம் தெய்வத்தின் திருவருளால் நிகழ்ந்தது என்பதில் அவருக்குச் சந்தேகம் எழவில்லை.

எப்போதும் தில்லை நடராஜப் பெருமானிடம் அவர் கொண்டிருக்கும் பக்தியையும், அசைக்க முடியாத நம்பிக்கையையும், இச்சம்பவம் உறுதிப்படுத்தியது.



சென்னை மாநிலத் தலத்தாபன அறநிலையப் பாதுகாப்பு

அமைச்சர் மாண்புமிகு குமாரராஜா முத்தைய செட்டியார். 1937

# 9. வேருக்கு நீர்

மனிதன் எண்ணுகிறான்–

இறைவன் வழிநடத்திச் செல்லுகிறான் என்பதில் அசையா நம்பிக்கை கொண்டவர் அண்ணாமலைச் செட்டியார்.

பள்ளி நிர்வாகம் தன் கைக்கு வந்தபோது அண்ணாமலைச் செட்டியார் கல்லூரியைப் பற்றி எண்ணினார்.

கல்லூரிக் கனவு இனிதே நிறைவேறிய பின் இப்போது – அவரது எண்ணமெல்லாம் பல்கலைக் கழகத்தைப் பற்றியே இருந்தது.

கல்லூரி துவங்கிய போதே – பல்கலைக் கழகம் ஒன்று வேண்டும் என்கிற எண்ணம் அவர் மனத்தில் ஆழப் பதிந்து வேரூன்றி விட்டது. ஆயினும் –

வேருக்கு நீர் வார்த்தாற்போல் அவருடைய ஆழ் மனத்தில் கொண்டிருக்கும் ஆவலை; அவ்விரு பேரறிஞர்களும் பிரதிபலித்துக் கூறியபோது – அண்ணாமலைச் செட்டியார் தீவிரமாகச் செயலில் இறங்கினார்.

பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு வேண்டிய திட்டங்களை வரையத் துவங்கினார்.

இப்பல்கலைக் கழகம் நிறுவுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், 'திருவேட்களம்', என்பது. இங்குள்ள ஆலயத்திற்கு; அண்ணாலைச் செட்டியாரின் சகோதரர் ராமசாமி செட்டியார் சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் திருப்பணிகள் செய்து முடித்திருந்தார்.

அந்தச் சிறிய கோயிலும் – அதைச்சுற்றிலுமுள்ள பிரம்மாண்டமான பரப்பளவுள்ள இடமும் அவர்களைச் சேர்ந்ததுதான்.

இந்த ஸ்தலம் சுமார் ஆயிரத்தி இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவர்களாகிய திருஞான சம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் பாடப் பெற்ற திருத்தலமாகும்.

திருஞான சம்பந்தர் இத்திருத்தலத்தில் சிறிது காலம் தங்கியிருந்தார் என்கிற பெருமையும் அந்த மண்ணிற்கு இருந்தது.

பல்கலைக்கழகம் இடம் பெறப்போகும் இடம் நிர்ணயிக்கப்பட்டு அஸ்திவாரம் தோண்டப்பட்டது. அதன் பிறகு காரியங்கள் அசுர வேகத்தில் நிறைவேறின.

கழகத்தின் பிரதான கட்டிடத்தை ஒட்டினாற்போல், பல அழகான சிறிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

பல்கலைக் கழகத்தின் பகுதிகளாக அமைவதற்குரிய அறிவியல் கல்லூரி, தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, தமிழ் – வடமொழி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி; இசைக் கல்லூரி ஆகியவை அழகிய வடிவில் உருப்பெற்றன.

இதற்குள் முத்தையாச் செட்டியார் கல்லூரி படிப்பு முடித்து பட்டதாரி ஆகிவிட்டார்.

பல்கலைக் கழகம் உருவாவதற்கு முன்பிருந்தே; கல்லூரியில் படித்தபடி தந்தைக்கு உதவியாக இருந்தார். இப்போது முழு மூச்சுடன் தந்தைக்கு அடுத்தபடியாக, கழக வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு பணியாற்றினார்.

பல்கலைக் கழகம் இடம் பெற்றுள்ள இடத்திற்கு 'அண்ணாமலை நகர்', என்கிற பெயர் சூட்டப்பட்டது.

பல்கலைக் கழக வேலைகள் துரிதமாக நடைபெற்று முடியும் தறுவாயில் இருந்தது. மாணவர் தங்கும் விடுதிகளையும், உணவு இல்லங்களையும் கட்டும் போது முத்தையா செட்டியார் உடனிருந்து தக்க ஆலோசனைகள் கூறி நவீன முறையில் உருவாக்கினார்.

பல்கலைக்கழக வேலைகள் பூர்த்தி அடைந்து அலங்கார வளைவுகள் வைத்தபோது பார்ப்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

குறிப்பிட்டதொரு முகூர்த்தத்தில் நல்ல நாள் பார்த்து –

1929–ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து பல்கலைக் கழகம் செயல்படத் துவங்கியது.

அதன் பிறகு விரைவிலேயே "முத்தையா செட்டியார் பாலிடெக்னிக்"கும் பல்கலைக் கழகத்துடன் இணைந்து கொண்டது.

"அண்ணாமலைச் செட்டியார்" என்கிற "ஒரு தனி மனிதரின் சாதனையால்," உருவாகி நிற்கும் பல்கலைக் கழகம் இந்தியாவிலேயே இது ஒன்று தான்.

அண்ணாமலைச் செட்டியாரின் அரிய சாதனையைப் பாராட்டும் வகையில் அரசாங்கம் அவருக்கு, "ராவ் பகதூர்", "திவான் பகதூர்", "சர்" போன்ற பல பட்டங்களை அளித்து கௌரவித்தது.



சென்னை மாநிலக் கல்வி சுகாதார மருத்துவ அமைச்சரும், சென்னைப் பல்கலைக்கழக இணைவேந்தரும் ஆகிய மாண்புமிகு குமாரராஜா முத்தைய செட்டியார், 1936.

# 10. இசையும் கல்வியும்

கல்வியையும்; தமிழ் இசையையும் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தம் இரு கண்கள் போல் கருதினார்.

ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழ் இசையின்பால் அளவற்ற ஈடுபாடு உடையவர்கள். மற்ற எதனையும் விட இசைதான் அவரது பொழுது போக்காகும்.

குறிப்பாக தமிழ் இசை, பல்கலைக் கழகத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெறவேண்டும் என்று விரும்பினார்.

அதனால் அண்ணாமலை நகரில் **1929** – ம் ஆண்டு இசைக் கல்லூரி ஒன்றைத் துவக்கினார். தம் இறுதி மூச்சு உள்ளவரை தமிழ் இசையின் வளர்ச்சிக்கும்; அதன் புகழுக்கும் பாடுபட்டார்.

தமிழ் இசை மறுமலர்ச்சிக்கென, வழிமுறைகள் காண்பதற்காக, அண்ணாமலை நகரில் ஒரு மகாநாடு கூட்டினார்.

இசையைப் பொறுத்தவரை தென்னிந்திய மக்கள் பெருந்துணையாகக் கருதிய அண்ணாமலைச் செட்டியார், தமிழிசை வளர்ச்சிக்காக அறக்கட்டளை ஒன்றை நிறுவினார்.

தமிழ் இசை இயக்கத்திற்கும்; அதன் ஆக்கத்திற்கும் பெருந்தொண்டாற்றிய ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களை தமிழுலகம் என்றும் பாராட்டும்.

புகழ் பெற்ற இசைக்கலைஞர்களை ஒன்று கூட்டி—

தமிழிசையில் மறைந்து போன அரிய செல்வங்களை வெளிக் கொணரவும்; தமிழ் இசை ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும்; தமிழ் இசைக் கீர்த்தனைகள் அடங்கிய நூல்களை வெளியிடவும்; தக்க ஏற்பாடுகளை அரசர் செய்தார்.

நாளும் பொழுதும், தமிழ், தமிழிசை, கல்விப் பணி, என்று அரசருக்கு, சென்னை பல்கலைக்கழகம் எல்.எல்.டி பட்டத்தினை வழங்கியது.

அண்ணாமலைப் பல்கழைக்கழகம் அரசரின் அரிய பணிகளைப் பாராட்டி டி.லிட் பட்டத்தினை வழங்கி பெருமை கொண்டது.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாருடன் இறைப் பணியிலும்; இசைப் பணியிலும் இணைந்து நின்று தொண்டாற்றியவர் அரசரின் மதிப்பிற்குரிய சர். ஆர். கே சண்முகம் செட்டியார் அவர்கள்.

தமிழிசை இயக்கத்தின் வளர்ச்சிக்கு சலியாது உழைத்தவர்கள்; ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரும் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் என்பதனை தமிழகம் மறக்க முடியாது.



ராணி லேடி மெய்யம்மை ஆச்சி.

# 11. எனது பணியும் என் ஆசைகளும்

நான் யார்? என் விருப்பம் என்ன?

என் பணி என்ன? கொள்கை என்ன? ஆகிய கேள்விகளுக்கு விடையளித்தாற் போல் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 25.3.1944–ம் ஆண்டு, அனைவருக்குமான ஒரு பொதுக்குறிப்பு எழுதியிருந்தார்கள் அதில்

உ

## சிவமயம்

“ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தினந்தோறும் வணங்குவேன். அண்ணாமலை சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொருநாளும் சிந்திப்பேன். தமிழ் நாடெங்கும், தமிழிசை முழங்க வேண்டுமென்பது எனது ஆவல், ஈட்டலும், காத்தலும் வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை.”

**மு. அண்ணாமலைச் செட்டியார்**

# 12. மீனாட்சி கல்லூரி

தொண்டு செய்யும் ஆர்வம் ஒருவர் உள்ளத்தில் எழுந்து விட்டால்; ஆற்றொழுக்குப் போல் அது அவரை மேன்மேலும் அரிய பல தொண்டுகள் செய்ய இழுத்துச் சென்று கொண்டே இருக்கும்.

பலன் கருதாமல் பிறருக்குத் தொண்டு செய்வதில் பேரின்பம் இருக்கிறது.

இதில் ருசி கண்டவர்களின் வாழ்க்கை தொண்டு மயமாகவே விளங்கும் என்பதற்கு அண்ணாமலைச் செட்டியார் ஓர் உதாரணமாக விளங்கினார்.

அண்ணாமலை செட்டியாரின் சகோதரர் ராமசாமி செட்டியார் சிதம்பரத்தில் "ராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல் என்னும் பெயரில் உயர்நிலைப் பள்ளி ஒன்றை நிறுவி அது சிறப்பாக நடந்து கொண்டிருந்தது."

1918 –ம் ஆண்டு ராமசாமி செட்டியார் நோய் வாய்ப் பட்டிருநத்தார். மரணத் தருவாயில் அருகிலிருந்து அண்ணாமலைச் செட்டியாரிடம், "தன்னுடைய உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகப் பொறுப்பினை மேற்கொண்டு; ஏற்று நடத்த வேண்டும்," என்று கேட்டுக் கொண்டார்.

சகோதரரின் மரணத்திற்குப் பிறகு அண்ணாமலைச் செட்டியார், தவறாமல் அப்பள்ளிக்குச் சென்று, வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து வந்தார்.

பள்ளி சிறப்பாகச் செயல் பட்டுக் கொண்டிருந்தது. அப்போது அண்ணாமலைச் செட்டியார்; இப்பள்ளி மாணவர்களின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தார்.

உடனடியாக ஒரு கல்லூரியின் தேவையைப் பற்றி அவர் மனம் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

சுற்று வட்டாரத்தில் கல்லூரிகள் இல்லை; அரசாங்கக் கல்லூரிகளின் போதனாமொழி அவருக்கு உடன் பாடாக இல்லை. இந்த சமயத்தில், மதுரையில் கல்லூரி துவங்குவது பற்றி தீவிரமாக எண்ணம் கொண்டிருந்தார்.

அப்போது மதுரையில் உருவாகிக் கொண்டிருந்த ஒரு கல்லூரியைப்பற்றி அறிந்து அதை அவர் ஏற்று நடத்த முன்வந்தார். அதற்காக 51 ஏக்கர் நிலமும் வாங்கிக் கொடுத்தார்.

ஆனால் அவர்களுடன் உடன்பாட்டிற்கு வர இயலாத நிலைமையில், மனம் உடைந்து கல்லூரிக்காக கொடுத்த 51 ஏக்கரை நன்கொடையாக அளித்துத் திரும்பினார். ஆயினும், புதுக் கல்லூரி துவங்குகிற எண்ணம் அவர் உள்ளத்தில் தீவிரமாகவே இருந்து வந்தது.

இரவெல்லாம் கண் விழித்து, இது பற்றித் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த போது பொறி தட்டியது போன்று அவர் உள்ளத்தில் ஓர் யோசனை உதித்தது.

தான் ஏற்று நடத்திவரும் உயர் நிலைப்பள்ளியிலேயே கல்லூரியை உருவாக்கிவிட்டால் என்ன?– என்பது தான் அந்த யோசனை

உடனே அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

உயர்நிலைப் பள்ளியை ஒட்டி இணைந்தாற் போல், மிகப் பெரிய ஹாஸ்டல் ஒன்று இருந்தது. அதனை கல்லூரியாகத் தற்காலிகமாகப் பயன்படுத்தலாம் என்று முடிவு செய்தார்; உடனே அதைச் செயல் படுத்தவும் செய்தார்.

24.6.1920–ம் ஆண்டு, சிம்பரத்தில் தன் அருமைத் தாயார் பெயரில் "மீனாட்சி ஆச்சி கல்லூரி"யை துவக்கினார்.

ஏராளமான பிரமுகர்களும், அறிஞர்களும் வந்திருந்து வாழ்த்தினார்கள். அப்போது அந்த உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அண்ணாமலைச் செட்டியாரின் மகன் முத்தையா செட்டியாரும் உடன் இருந்து தந்தைக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் செய்தார்.

அதற்கடுத்த இரு ஆண்டுகளிலேயே மீனாட்சி கல்லூரிக்கு என்று ஒரு சிறப்பான கட்டிடத்தை, எல்லா வசதிகளுடனும், பழைய கல்லூரிக்கு அருகிலேயே கட்டி முடித்தார். கல்லூரி முதல்வராக கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி பணியேற்றார்.

1922 –ம் ஆண்டு நடைபெற்ற புதிய கல்லூரியின் ஆண்டு விழாவிற்கு முக்கிய பிரமுகர்களும்; செல்வந்தர்களும், அறிஞர்களும், திரளாக வந்து, அண்ணாமலைச் செட்டியாரின் சாதனையைப் பாராட்டிப் பேசினார்கள்.

கல்லூரி சிறப்பாக நடந்து கொண்டிருந்த போது– விரைவில் இக்கல்லூரியையே ஒரு பல்கலைக் கழகமாக்கிவிட்டால் என்ன? என்கிற எண்ணம் அடிமனத்தில் ஒரு கருவாக உருப்பெற்றிருந்தது.


அன்று விழாவிற்குத் தலைமை தாங்கி சர். கி. பி. இராமசாமி ஐயர் பேசிய போது

“இக்கல்லூரியின் விசாலமான சுற்றுப்புறம் ஒரு பல்கலைக் கழகம் உருவாவதற்கு ஏற்றதாக இருக்கிறது” என்று கூறினார்.

கல்வித்துறையில் புகழ் பெற்று விளங்கிய மற்றோர் அறிஞரான சி. இராமலிங்க ரெட்டி அவர்களும், அடுத்த கல்லூரி ஆண்டு விழவின் போது சர். சி. பி. மட ராமசாமி ஐயர் கூறிய அதே கருத்தைக் கூறி; விரைவிலேயே இங்கு ஒரு பல்கலைக் கழகம் உருவாகினால், இதனால் பலரும் பயனடைவார்கள் என்று கூறினார்.

கல்லூரி துவக்கிய நாளிலிருந்து தான் எண்ணிக் கொண்டிருந்த அதே கருத்தை தன் உள்ளக்கிடக்கையை உணர்ந்தாற்போல இரு பேரறிஞர்களும் கூறிய போது, அண்ணாமலைச் செட்டியார், வியந்து போனார். இறைவனது, திருஉள்ளத்தை யார் அறிவார்? என்று எண்ணி தீவிரமாக பல்கலைக் கழகத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தார்.

* * *



அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் திருப்பூட்டுதல்.



சென்னை அடையாறு காந்திநகர் ராணி மெய்யம்மை உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில்,

அரசர் அவர்களும் அரசியார் அவர்களும், திரு. எம்.பி. தாமோதரன் அவர்களுடன்.

# 13. துயரம் ஒடைத்தவர்

பரிசுகள்; பாராட்டுகள்; இவற்றைப் பற்றி நினைக்க நேரமின்றி அண்ணாமலைச் செட்டியாரை கடமைகள் கை நீட்டி அழைத்தன.

அத்தனைக் காலம் இந்தியாவுடன் இணைந்திருந்த பர்மா தனியாகப் பிரிந்தமையால் நகரத்தார் பெரிதும் பாதிக்கப் பட்டனர்.

பர்மாவிலிருந்து இந்தியர்களின் பாதுகாப்பிற்காகச் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது.

பர்மாவில் இந்தியர்கள் ஒன்று கூடி முடிவு செய்து அண்ணாமலை அரசர் தலைமையில் ஒரு குழு, லண்டனிலிருக்கும் இந்திய நாட்டுச் செயலாளரோடு பேசுவதற்கென்று அனுப்பப் பட்டது.

அக்குழுவில் திரு. ஊர்மா; திரு. மிஸ்ரர் முகமது ரபி, திரு. எஸ்.எஸ். காஜி; திரு. கே. நாகராஜன் ஆகியோர் உறுப்பினராகச் சென்றனர்.

அக்குழுவினர் **1936**–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இங்கிலாந்து சென்று இந்திய நாட்டுச் செயலாளர், உதவி செயலாளர், வின்டர்டன் பிரபு, கெயிலி பிரபு பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரிடம், பர்மாவிலுள்ள இந்தியர் படும் துன்பங்களையும்; பிரச்சினைகளையும் எடுத்துக் கூறி அவற்றிற்குப் பரிகாரம் காணுமாறு வேண்டினர்.

இந்தியர்களின் கோரிக்கைகளிலுள்ள நியாயம் உணரப்பட்டு, பர்மிய அரசு ஆணை மூலம் பர்மாவாழ் தமிழர்களின் நலனை தகுந்த முறையில் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்தியர்களுக்கும், பர்மியர்களுக்கும் உறவு முறைகள், சுமுகமாக இருந்து வந்தன.

பர்மிய பொருளாதாரத்தில் நகரத்தார்கள் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தார்கள்.

லண்டன் சென்ற குழுவினரின் பணி, இருதரப்பினருக்கும், பெரும் பயன் விளைவிப்பதாக இருந்தது.

பர்மா – இந்தியர்களுக்குள்ள பரவலான பொறுப்புகளை உணர்ந்த அதே வேளையில் – அண்ணாமலை செட்டியார் பர்மாவிற்கு இந்தியா ஆற்ற வேண்டிய கடமைகளையும் உணர்ந்திருந்தனர்.

இந்தியர்களின் குடியேற்றத்தைப் பற்றிய வினாக்கள் அடிக்கடி, விவாதத்திற்குரியனவாயிருந்தன.

1937–ல் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்த ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்; மேலவையிலும், வெளியிலும், இந்தியர்களுக்கு நியாயமான பங்குரிமை கிடைப்பதற்குச் சோர்வில்லாமல் போராடினார்.

பர்மா இந்தியர்களைப் பற்றிய அயர்வற்ற பணிகளில், பர்மா பிரச்சினையில் ஆர்வம் கொண்ட அனைத்து இந்தியர்களின் அசைக்க முடியாத துணை கிடைத்தது.

அவ்வாறு ஆர்வம் காட்டி துணை நின்றவர்களில், இந்திய கப்பல் போக்குவரத்து கழகத்தின் திரு. எம்.ஏ.மாஸ்டர் அவர்களும் –

**1932**–ல் பர்மா – இந்தியா தூதுக் குழுவில் இருந்த ஹாஜி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இதற்கு முன்னதாக, அண்ணாமலை செட்டியார், அகதிகள், பிரெஞ்சு ஆட்சிக்குட்பட்ட இந்தோ – சீனாவிலிருந்த, இந்தியர்களின் நலனைப் பற்றிப் போராடினார்.

அவ்வரசு இந்தியர்களை, மாற்றந்தாய் மனப் பான்மையுடன் நடத்த முற்பட்டது.

**1935**–ம் ஆண்டில் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார், ப்ாரிஸ் நகரம் சென்று இந்தியர்களின் கோரிக்கைகளை நியாயமான முறையில் பிரெஞ்சு அரசிற்கு எடுத்துரைத்தார். அவ்வரசு இவர்களது குறைகளை விரைவில் தீர்த்து வைத்தது.

ஐரோப்பாவிலிருந்து அண்ணாமலைச் செட்டியார் அமெரிக்கா சென்றார். அப்போது அண்ணாமலைச் செட்டியாரின் மனைவி ராணி சீதை ஆச்சி அவர்களும், கணவருடன் ஐரோப்பா, அமெரிக்கா சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டார்.

அரசியல் அலுவல்களில் பெரிதும் மூழ்கி இருந்த காலத்திலும் கூட, அண்ணாமலைச் செட்டியார், அண்ணாமலை நகரை மறந்ததே இல்லை.

எங்கு அவர் இருந்தாலும்—

எவ்வாறான பணியில் ஈடுபட்டிருந்தாலும், அவரது சிந்தனையெல்லாம், பல்கலைக் கழகத்தைப் பற்றியே இருக்கும்.

பல்கலைக் கழகத்தின் வளர்ச்சி, அதன் விரிவாக்கம் ஆகியவையே அவரது பெரு விருப்பமாகும்.

ஒரு பல்கலைக் கழகம் விரிவாக்கப்படுவதற்கும், அதன் நோக்கம் நிறைவேறுவதற்கும், அப்பல்கலைக் கழகம் போதுமான நிதிநிலையில் சிறந்து விளங்க வேண்டும் என்பதனை அவர் உணர்ந்திருந்தார்.

பொருளாதார நிலையில் உறுதிப்பாடுடன், வலுவான அடிப்படையில் அதனை அமைக்க வேண்டும், என்ற அவரது நோக்கம் மகிழ்வாக நிறைவேற்றப்பட்டது.

அரசர் அவர்களால், ஓர் அறக்கட்டளையோ, பிறவோ அமைக்கப்படாமல் எந்த ஒரு ஆண்டும் முடியவில்லை.

பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்த சான்றோர்களின் பெயரால் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்க ஏற்பாடுகள் செய்தார்.

ராஜா, தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்திலிருந்து, "என் உள்ளமும் உயிரும் அண்ணாமலை நகரில் இருக்கிறது"— என்று எழுதியிருக்கும் வரியினை, பேராசிரியர் எம்.எஸ். துரைசாமி அவர்கள் எடுத்துக் காட்டினார்.

* * *

# 14. அறுபது ஆண்டுகள்!

மனித வாழ்க்கையில் அறுபது ஆண்டுகள், என்பது ஓர் இனிய கனவாகும். வாழ்க்கையின் பலதரப்பட்ட அனுபவங்களை, தழும்பேற்றிக் கொண்ட ஒரு நீண்ட பயணத்தின் இளைப்பாறல்.

1941 –ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 திங்கள் ராஜா அவர்களின் மணிவிழா கொண்டாடப்பட்டது.

உலகமக்களிடத்தில் அவருக்கிருந்த தன்னிகற்ற சிறப்பின் வெளிப்பாடாக, அந்நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழ் இசை இயக்கத்தைத் துவங்கிய போது பலர் வன்மையாக எதிர்த்தனர்.

தமிழில் கீர்த்தனைகளைப் பாடுவது ஒரு பாவச்செயல் போல் பிரசாரம் செய்தார்கள்.

அதுகாறும், யாருடைய அவதூறுக்கும், நிந்தனைக்கும் ஆளாகாது தூய தொண்டு வாழ்வு வாழ்ந்து வரும் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தமிழை உயர்வு படுத்த எண்ணியதற்காக, பொருள் தெரிந்து இசை பாடத் தமிழ்தானே தகுதியானது என்று கூறிய காரணத்திற்காக வெகுண்டார்கள்.

ஆனால் அண்ணாமலைச் செட்டியார் அதற்காக யாரையும் நோகவுமில்லை; குறைபடுத்தவுமில்லை.

அவர்களது அறியாமைக்காக வருந்த மட்டும் செய்தாரே ஒழிய அதற்காகத் தான் எடுத்த காரியத்தை நிறுத்தாமல் நிறைவேற்றி –

தூற்றியவர்கள் போற்றும்படி மாபெரும் வெற்றியும் பெற்றார்.

பல்கலைக்கழகம்– அதனைத்தோற்றுவித்தவருக்கு தன்னுடைய நன்றியுணர்வை புலப்படுத்திக் கொண்டது.

அறுபது ஆண்டுகள் நிறைவு என்பது வாழ்க்கைப் பயணத்தில் குறிப்பிடத்தக்க ஒன்றாக இருந்தாலும்,

உழைப்பினின்றும் ஒரு சிறிதும் ஓய்வு கொள்ளாமல்; தம் உயிர் மூச்சின் இறுதிக் காலம் வரையில் தாம் ஆற்ற வேண்டிய அரிய பணிகள் பல இருக்கின்றன என்றே அரசர் கருதி வந்தார்.

வாழ்க்கை இவருக்குப் பல பாடங்களைக் கற்பித்தது.

அவர் பல தலைநகரங்களையும், அங்கு வாழ் மக்களையும்; அங்கு நிலவிய அரசுகளையும் கண்டு அவர்களிடம் அவர் ஆழமான சிறந்த நட்பினைக் கொண்டிருந்தார்.

அவர் சிறந்த நினைவாற்றல் வாய்ந்தவராய் விளங்கினார். உரையாடல் திறம் மிக்கவராய்த் திகழ்ந்தார்.

அவர் விருந்தோம்பும் முறை மன்னர்களுக்கே உரியதாக விளங்கியது.

செட்டி நாட்டில் அவர் அரண்மனைக்குச் செல்பவர்கள் அங்கு அறிவு சார்ந்த நல் அறிஞர்களையே சந்திப்பர்.

எந்தப் பொருளைக் குறித்த விவாதமானாலும் அறிவு விளக்கத்திற்கான முறையில், ஒளிகூட்டிப் பேசும் இயல்புடையவர் ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார்.

அவருடைய மணிவிழாவிற்குப் பின்னர், பல்கலைக் கழகத்தில் இசைத் தமிழ் வளர்ச்சியே, பெரிதும் அவர் நெஞ்சைக் கசியச் செய்தது.

தன்னுடைய இல்வாழ்க்கையில் அவர் நற்பேறு பெற்றவராக, விளங்கினார். அவரது வாழ்க்கைத் துணைவி ராணி சீதை ஆச்சியார், கடவுள் பக்திக்கும்– தாராள மனப்பான்மைக்கும் பெயர் பெற்றவராய்த் திகழ்ந்தார்.

அவர்களுக்கு வாரிசுகளாக வாய்த்த மக்கட் செல்வங்கள் மூன்று ஆண்களும், நான்கு பெண்களுமாவர்.

மூத்த மைந்தராகிய ராஜா சர். முத்தையா செட்டியார், தன் தந்தையாருக்குப் பின் அவரது சிறப்புக்களையும், குடும்ப பெருமைகளையும் காத்து வருகின்ற, வாரிசாகத் திகழ்கின்றார்.

**1932**–ம் ஆண்டு மேயர் பதவி நிறுவப் பெற்ற பொழுது, சென்னை மாநகராட்சியின் முதல் மேயராகப் பொறுப்பேற்றவர் இவரே.

மேலும், கல்வி, பொதுநலம் ஆகிய துறைகளில் அமைச்சராகவும் – சென்னை பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராகவும் பணியாற்றினார்.

அரசரது இரண்டாவது குமாரராகிய ஆர். இராமநாதன் செட்டியார் சென்னை நகர ஷெரீப்பாகவும்;

1950 – 51–ல் சென்னை நகர மேயராகவும், பலமுறை பாராளுமன்ற உறுப்பினராகவும்; இந்திய செர்ல் வங்கியின் உறுப்பினராகவும் பல பொறுப்புகளை திறம்பட ஆற்றியவர்.

மூன்றாவது குமாரராகிய எம்.ஏ. சிதம்பரம் செட்டியார், தென்னிந்திய வர்த்தக சங்கத் தலைவராகவும், சிறந்த விளையாட்டு வீரராகவும்; சென்னை முன்னாள் மேயராகவும் விளங்கியவர்.

அண்ணாமலை அரசரின் புதல்வர்கள் மூவரும் தாம் பிறந்த குடும்பத்தின், மரபையும், பெருமையையும் கண்ணெனக் காத்து வருவதோடன்றி –

பொது வாழ்வில் பிறர் நலத்திற்கான பெருந் தொண்டுகளை ஆற்றியும் வருபவர்கள். தாம் ஒவ்வொருவரும் தமக்கென தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள துறைகளில் தங்கள் தங்கள் தனித் திறமைகளை பொறித்து வருகின்றனர்.



# 15. ராஜா. சர். அண்ணாமலை செட்டியார்

"ஓர் எளிய தொடக்கம் – பல அரிய பணிகளுக்கு அடிகோலுகிறது" – என்பதை அண்ணாமலைச் செட்டியார் அனுபவ பூர்வமாக அனுபவித்தார் –

சகோதரரின் உயர்நிலைப் பள்ளியை ஏற்று நடத்த முன்வந்தது –

பள்ளியைக் கல்லூரியாக்கியது – கல்லூரி பல்கலைக் கழகமாக உருப்பெற்றது எல்லாமே, கனவில் நடந்து முடிந்தது போலிருந்தது.

பல்கலைக் கழக முதல் 'செனட்' 1930–ம் ஆண்டு மார்ச் மாதம், 24–ம் தேதி, சென்னை மாநில ஆளுநர் ஹெச்.இ. சர். ஜார்ஜ் பிரெடரிக் ஸ்டான்லி என்பவரால் தொடங்கி வைக்கப்பட்டது.

பல்கலைக் கழகத்தில் இனி இடம் பெறப் போகும் விளையாட்டு, உடற் பயிற்சி வசதிகள் பற்றியும்; பல்வேறு திட்டங்கள் பற்றியும் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேறின.

அண்ணாமலைச் செட்டியாரின் இந்த மகத்தான சாதனையைப் பாராட்டும் வகையிலும்; அவரது அயராத கல்வித் தொண்டையும்; கொடைத் திறனையும் கவுரவிப்பதற்காகவும் –

இங்கிலாந்து மன்னர் "பிரான்', மட்டற்ற மகிழ்ச்சியுடன், வழிவழியாக வரும் "ராஜா" என்னும் பட்டத்தினை 3.3.1929 – அண்ணாமலைச் செட்டியாருக்கு வழங்கினார்.

அதுவரை சர். அண்ணாமலைச் செட்டியார் என்று அழைக்கப்பட்டவர் **4.3.1929** முதல், ராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் என்று, அனைவராலும் மகிழ்ச்சியுடன் அழைக்கப்பட்டார்.


அண்ணாமலைச் செட்டியார் "ராஜா" பட்டம் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் வகையில் –

நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களுக்கு கானாடு காத்தானில் மிகச் சிறப்பானதொரு வரவேற்பளித்து – இதனை, "பொது தொண்டிற்கு கிடைத்த பரிசு" என்று பாராட்டிப் பேசினார்கள்.

கோவிலூரில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு, வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் தலைமை தாங்கி பேசினார்.

அண்ணாமலைச் செட்டியாரின் தொண்டைப் பாராட்டி, "வரலாற்றில் இடம் பெறும் உயர்ந்த பணி" என்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து, பல ஊர்களிலிருந்தும் ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியாருக்கு அழைப்பு விடுத்து பாராட்டு விழாக்கள் நடந்து கொண்டிருந்தன.



அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவில் உறவினர்களுடன் – அரசரும் அரசியாரும்.

# 16. கவர்னர்கள் கண்ட கானாடுகாத்தான்

எவ்வளவு பெரிய பிரமுகர்களானாலும், தனிப்பட்ட ஒருவர் இல்லத்திற்கு நாட்டையாளும் கவனர்கள் செல்கிற வழக்கமில்லை. ஆனால் –

அண்ணாமலைச் செட்டியாரின் அழைப்பை ஏற்று எண்ணற்ற கவர்னர்கள் அவரது இல்லத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள் என்றால், அதற்கு –

அவர்கள், அண்ணாமலைச் செட்டியார் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பையும், நன் மதிப்பையும் தவிர வேறு என்ன காரணம் கூற முடியும்?

அண்ணாமலைச் செட்டியார் அழைப்பிற்கிணங்கி –

**1916**–ம் ஆண்டு 'லார்ட் பென்ட்லாண்ட்', அண்ணாமலைச் செட்டியாரின், செட்டி நாடு அரண்மனைக்கு விஜயம் செய்து அவர் நிறுவ உத்தேசித்துள்ள, தாய் – சேய் மகப்பேறு மருத்துவ மனைக்கான அடிக்கல்லை நாட்டினார்–

**1922**–ம் ஆண்டு, லார்டு வெலிங்கடனும் லேடி வெலிங்டனும் விஜயம் செய்தார்கள்.

**1926**–ம் ஆண்டு, லார்டு கோஸ் சென் விஜயம் செய்தார்.

**1943**—ல் சர். ஆர்தர் ஹோப் – சென்னையிலுள்ள செட்டிநாடு ஹவுஸுக்கு விஜயம் செய்தார்.

**1945**—ல் சர். ஆர்ச் பால்ட்நை விஜயம் செய்தார்.

**1946**—ல் ஆர்ச் பால்ட்நையும், லேடி நையும் செட்டிநாடு விஜயம் செய்தனர்.

தனக்கென்று இப்படியொரு கௌரவமான அந்தஸ்தை அண்ணாமலைச் செட்டியார் வகித்து வந்தாலும் –

எந்த சாமானிய மனிதரும் அவரது இல்லத்திற்குச் சென்று எளிதில் அவரைச் சந்திக்கும்படியான எளிய வாழ்வு வாழ்ந்தவர்.



அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவிற்கு முதல் நாள் அரசரும் அரசியாரும் –

செட்டிநாடு, 1–8–1965

# 17. நிறை வாழ்வு

1947 –ம் ஆண்டிலிருந்து ராஜா அண்ணாமலைச் செட்டியாரின் உடல் நலம் மெலிவுறத் துவங்கியது. எவ்வளவு மனவலிமையுடன் எதிர்த்து நின்ற போதிலும்; இறுதி நாட்கள் தன்னை நெருங்கி வருவதை அவர் உணர்ந்தார்.

தந்தையின் அருகில், மருத்துவர்கள் புடைசூழ சோகமே உருவாக முத்தையா செட்டியார் நின்று கொண்டிருந்தார்.

ராஜா அண்ணாமலைச் செட்டியார், முத்தையா செட்டியாரை அருகில் அழைத்தார்.


தன்னை செட்டி நாட்டிற்கு கொண்டு செல்லும்படி மெல்லக் கூறினார்.

உடனே அதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டன. தான் பிறந்த மண்ணை மிதித்த ராஜா அண்ணாமலைச் செட்டியார் புனித உணர்வு பெற்றது போல் உணர்ந்தார். சுற்றிலும் உறவினர்கள் சூழ்ந்திருக்க–


தன்னுடைய மகன், முத்தையா செட்டியாரின் கரங்களைப் பற்றியபடி; தனது இல்லத்தை நினைவு கூர்ந்தார்.

மெல்ல மெல்ல அவர் நினைவு நழுவிக் கொண்டிருந்தது.

1948 ஜூன் 15 தேதி மாலைப் பொழுதில் அவரது ஆவி மெல்லப் பிரிந்தது.



அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவின்போது, ராணி லேடி மெய்யம்மை ஆச்சி அவர்கள், திரு. எம்.ஏ. சிதம்பரம் செட்டியார் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள் 2–8–1965



ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவியர் வாழ்த்துப் படித்து அளிக்கின்றனர்.

# 18. அண்ணாமலை என்னும் அற்புத மனிதர்

பலதரப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட மனித சமூகத்துடன் பின்னிப் பிணைந்து வாழும்போது–

திறந்த புத்தகம் போல் வாழ்வதென்பது இயலாத ஒன்று;

உலகிலுள்ள தீய குணங்களில் ஏதேனும் ஒன்று; நாம் விரும்பியோ, விரும்பாமலோ; அல்லது அறியாமலும் கூட, நம் மனத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டிருக்கலாம். எப்போதாவது வெளிப்படும் போதே அதனை அடையாளம் காண இயலும்.

தீயவற்றினின்று விடுபட வேண்டுமென்கிற எண்ணமே ஒருவித பயிற்சிதான்.

இத்தகைய பயிற்சியின் மூலம், பரிசுத்தமான மனத்தைப் பெறுவதுதான் உத்தமமான வாழ்க்கை.

பலதரப்பட்ட சோதனைகளுக்கு மத்தியிலும் ஒரு உத்தமமான வாழ்க்கைத் தன்னை ஆட்படுத்திக் கொண்டவர் ராஜா. சர். அண்ணாமலைச் செட்டியார். மேலேழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்கு அவரது ஆடம்பர வாழ்க்கை தெரியும்; ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு அவரது பற்றற்ற மனம் தெரியும்.

பெரும்பாலான தீய எண்ணங்களுக்கும் தீய செயல்களுக்கும் மூல காரணம்; ஆசையும், உள்ளத்தில் தூய அன்பும்; இரக்கமும் இல்லாமையே!

பரம்பரையான செல்வந்தர் குடியிற் பிறந்த அண்ணாமலைச் செட்டியாருக்கு தூய மனமிருந்தது; திரளான செல்வமிருந்தது.

ஆனாலும்—

அபரிமிதமாகப் பொருள் ஈட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

அயரா உழைப்பாலும்; அதிமதிநுட்பத்தாலும், திரை கடல் ஓடியும், திரவியம் திரட்டினார்.மலையத்தனை பொருள் குவித்தும், அவர் மனம் அமைதியுறவில்லை.


காரணம்—

நலிவுற்ற மக்களுக்காகவும், நாட்டிற்காகவும்; அறப்பணி; கல்விப் பணிகளுக்காகவும் பொருள் திரட்டி தாம் ஆற்ற வேண்டிய பணிகள், கடல் போல் அவர் கண் முன் விரிந்து நின்றன. இல்லாதவன் – பிறருக்கு உதவி செய்வதெப்படி? என்பதை உணர்ந்திருந்தார்.


உயரிய நோக்கமுடையதாயினும் எத்தகைய அரிய திட்டங்களுக்கும் அடிப்படைத் தேவை பொருளாதாரமே என்கிற அரிச்சுவடியை அவர் அறிய வைத்திருந்தார்.

அதனாலேயே—

தன் தொழில், பல துறைகளிலும் பெருக்கினார். நேர்மையான முறையில், மென்மேலும் பொருள் ஈட்டி—



பல்கலைக்கழகம் நிறுவியோர் நாள் விழாவில் மாண்புமிகு திவான்பஹதூர் குமாரசாமி ரெட்டியார் துணைவேந்தர் சர் சாமுவேல் அரங்கநாதன் ஆகியோருடன் – அண்ணாமலை நகர், 1933



P.E.N. மாநாட்டில் டாக்டர் இராதாகிருட்டிணன், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீ ஸ்ரீ பிரகாசா,
டாக்டர் சி.பி. இராமசாமி ஐயர் . எஸ். இராமசாமி நாயுடு, திரு. எம்.பி. தாமோதன்
[illegible]

அவற்றை–

நாட்டு நலனுக்காவும்–

நல் அறத்திற்காகவும்–

கல்விக்காகவும்–

வாரிஇறைத்த வள்ளல் அவர்.


அவர் உருவாக்கிய பல்கலைக் கழகமும் அவரால் உருப்பெற்ற தமிழ் இசை மன்றமும், எண்ணற்ற கல்விச் சாலைகளும், அளப்பரிய ஆலயத்திருப்பணிகளும், காலம் உள்ளளவும், கல்வெட்டுக்களாய் அவர் புகழ் பரப்பி நிற்கும்.

தமிழ் நாடு–


தமிழ் மொழி–

தமிழ் மக்கள்–

உள்ளவரை, ராஜா சர்.அண்ணாமலைச் செட்டியாரின் புகழ் மங்காமல் ஒளி வீசிக் கொண்டிருக்கும்!



ராஜா அண்ணாமலை மன்றம், சென்னை.



அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர்
சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களின் 60ஆம்
ஆண்டு நிறைவு விழாவில் சர் எம். விசுவேசுவரையா.
ஜி. டி. நாயுடு ஆகியோருடன் அரசர் அவர்கள்



அமரர் கே.பி. நீலமணி